# “சுவாசம் உள்ளவரை



பாபி

கொங்கு மண்டலம் அ.தி.மு.க.வின் கோட்டையாக இருந்து வருகிறது. இக்கோட்டையை அசைத்துப் பார்க்கும் விதமாக, அ.தி.மு.க.வில் உள்ள அதிருப்தியாளர்கள் பலரையும் தி.மு.க.வுக்குக் கொண்டு வரும் ‘அசைன்ட்மெண்ட்’ மிக ஜரூராக நடந்து வருகிறது. தி.மு.க. விரித்த வலையில் இந்நாள், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் அமைச்சர் என்று பலரும் விழுந்துள்ளதாக பரபரப்பான பேச்சும் அடிபட்டு வருகிறது.

அ.தி.மு.க. அதிருப்தியாளர்கள் பட்டியலில் முன்னாள் எம்.எல்.ஏ. பல்லடம் துரைமுருகன், முன்னாள் அமைச்சர் ப.வெ.தாமோதரன், இந்நாள் எம்.எல்.ஏ.வான அவினாசி பிரேமா, அண்ணா தொழிற்சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் சி.டி.சி. ஜப்பார் என்று பிரபலங்களின் பெயர்கள் நீண்டுகொண்டே போகிறதாம்.

பல்லடம் துரைமுருகன் 83,84ஆம் ஆண்டு வாக்கில் சென்னை சட்டக்கல்லூரி மாணவராக இருந்தார். அப்போது ஜெயலலிதா நற்பணி மன்றத்தைத் துவங்கி, தமிழக அளவில் அதிக கிளைகளை உருவாக்கினார். அதனால் ஜெயலலிதாவால் ஈர்க்கப்பட்டவருக்கு 91ஆம் ஆண்டு பல்லடம் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தது. துரைமுருகன் வெற்றி பெற்றார். அப்போது அ.தி.மு.க.வும் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததால் ஜெயலலிதா பேரவையின் மாநில பொதுச் செயலாளராக ஜெ.வால் நியமிக்கப்பட்டார் துரைமுருகன். தமிழகம் முழுவதும் தீவிர சுற்றுப்பயணம் செய்து பேரவையை வலுப்படுத்தினார். இன்றைக்கு அ.தி.மு.க.வில் உள்ள எம்.பி.க்கள், முன்னாள் அமைச்சர்கள் பலரும் அன்றைக்கு பேரவையில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

96 தேர்தலில் அதே பல்லடம் தொகுதியில் துரைமுருகன் மீண்டும் நிற்க, தமிழக அளவில் துரைமுருகனோடு அ.தி.மு.க.வும் தோல்வியைத் தழுவியது. இதற்குப் பிறகு இன்று வரை கட்சியில் எந்தப் பதவியிலும் இல்லாமல், அ.தி.மு.க. உறுப்பினராகவே தொடர்ந்து பணியாற்றி வருகிறார் துரைமுருகன். இவரை தி.மு.க.வுக்குள் கொண்டு வந்தால், தமிழக அளவில் உள்ள துரைமுருகனின் ஆதரவாளர்களை இழுக்கலாம் என்பதுதான் தி.மு.க.வின் திட்டம்.

இவருக்கு அடுத்தபடியாக முன்னாள் அமைச்சர் ப.வெ. தாமோதரன். எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தே தீவிர அ.தி.மு.க. விசுவாசி. அம்மாவுக்கு அதிக நெருக்கம். கடந்த சட்டமன்றத் தேர்தலில் பொங்கலூர் தொகுதியில் தாமோதரனுக்கு எதிராக, தற்போதைய பொங்கலூர் சட்டமன்றத் தொகுதி செயலாளர் எஸ்.பி.லோகநாதன், மாவட்ட கழக துணை செயலாளர் சண்முகம், எம்.கே. சுப்பிரமணியம், புத்தரிச்சல் பாபு, குண்டடம் தங்கவேலு உள்ளிட்ட அ.தி.மு.க.வினர் உள்குத்து அரசியலில் இறங்கினர். இதனால் வெறும் 54 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவினார் தாமோதரன்.

31 வருடங்கள் தொடர்ந்து ஒன்றிய செயலாளர், நான்கு வருடங்கள் மாவட்டச் செயலாளர், நான்கு வருடங்கள் அமைச்சர் என்று பதவி வகித்த, கட்சியின் சீனியரான தாமோதரன் தற்போது எந்தப் பதவியும் இல்லாமல் வெறுமனே இருக்கிறார். ‘எல்லாம் கோஷ்டி படுத்தும் பாடு என்கிறார்கள்’ அவரது ஆதரவாளர்கள். தாமோதரனின் தீவிர ஆதரவாளர்கள் பலரும், தற்போது அ.தி.மு.க.வில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, ‘கோவையில் இரண்டாம் இடத்தில் உள்ள நாயுடு மக்களின் பிரதிநிதியான தாமோதரனை தங்கள் பக்கம் கொண்டு வந்தால், தி.மு.க.வுக்கு தேர்தல் வெற்றி கிடைக்கும்’ என்பதே தாமோதரனை இழுக்கும் முயற்சிக்குக் காரணம் என்று பேசப்படுகிறது.

இந்த வரிசையில் அவிநாசி எம்.எல்.ஏ. பிரேமா ராமன். இவர் ஆரம்பத்தில் இருந்தே உள்ளூர் அ.தி.மு.க. பிரமுகர்களால் தொடர்ந்து ஓரம் கட்டப்பட்டு வருகிறார். முக்கியப் பிரபலங்களேகூட ‘தி.மு.க.விற்கு பிரேமா போனாலும் போவார்’ என்று பேசி, அவரை வெளியே அனுப்புவதில் குறியாக இருக்கின்றனர். அதுமட்டுமின்றி நிதிச் சுமையில் பிரேமா சிக்கி இருப்பதே அவரை தி.மு.க. டார்கெட் செய்யக் காரணம் எனவும் பேசப்படுகிறது.